1981 மார்ச் 30]

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புனர் வாழ்வு பெற்றவர்கள் எத்தனை பேர்கள் என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. ஜெயில் ரிபார்ம்ஸ் கமிஷனைப் பொருத்தவரைக்கும் அவர்கள் கூறிய பரிந்துரை என்னவென்றால், தனித்தனியாக பிரித்தால் அட்மினிஸ்டிரேஷன் எஃபிசியன்டாக இருக்கும் என்றுதான் பரிந்துரை செய்திருக்கிறார்கள். தற்போது சீப் புரோபேஷன் ஆபீசரும், 12 ரீஜினல் புரோபேஷன் ஆபீசர்களும், 96 புரோபேஷன் ஆபீசர்களும் அமைந்ததாக இருப்பதை, ஒரு டைரக்டர் ஆப் புரோபேஷன் என்ற அதிகாரியின் கீழ் இயங்க வேண்டும் என்று கேட்கிறார்கள். ஒரு குற்றவாளி 10 ஆண்டு காலம் சிறைத்தண்டனை வழங்கப்பெற்றிருந்தால், அவன் 7 அல்லது 6 ஆண்டு காலத்தில் சிறையை விட்டு விடுதலையாகி விடுவார். அந்த நேரத்தில், அவர்கள் வெளியே தன்னுடைய வாழ்க்கையை புனர் அமைத்துக் கொள்ளும் வகையில், ஏதாவது தொழில் ஈடுபடக் கூடிய அளவில், அவர்கள் சிறைக்குள்ளேயே பயிற்சி அளிக்கப்பெறுகிறார்கள். அதனால், இரு துறையும் இணைந்து செயலாற்றினால் நல்லது என்ற வகையில் கருத்து ஐ. ஜி. ஆப் பிரிசன்ஸ் அவர்களால் கூறப்பட்டிருக்கிறது.

கடலூரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 552—திரு. பாபு கோவிந்தராஜன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கடலூரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

(அ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(இ) வேலை எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) கேள்விகளுக்கு இடமில்லை.